# அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம்

**அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின்**
**ஆரம்ப நிலை அரைத் தேர்ச்சியுடைய சேவை வகுதியின் (PL 2) பதவிகளுக்கான திறந்த ஆட்சேர்ப்பிற்கு விண்ணப்பங்கள் கோரல் - 2026**

**1.0** அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆரம்ப நிலை அரைத் தேர்ச்சியுடைய சேவை வகுதியின் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காகத் தகைமையுள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**2.0** அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் ஆரம்பநிலை அரைத் தேர்ச்சியுடைய சேவை வகைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள பதவிகளின் வெற்றிடங்கள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| தொடர் இல. | அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | மின்சாரப் பாரந்தூக்கி இயக்குநர் (Electric Crane Operator) | 01 |
| 02. | உலை இயக்குநர் உதவியாளர் (Furnanceman Assistant) | 01 |
| 03. | பொருத்துநர் (பொது) உதவியாளர் (Fitter (General) Assistant) | 05 |
| 04. | இயந்திர இயக்குநர் (உற்பத்தி) உதவியாளர் (Machine Operator (Production) Assistant) | 01 |
| 05. | இயந்திரப்பணியாளர் உதவியாளர் (Machinist Assistant) | 03 |
| 06. | வார்ப்பாளர் உதவியாளர்( Molder Assistant) | 04 |
| 07. | வார்ப்பு மாதிரி தயாரிப்பாளர் உதவியாளர் (Pattern Maker Assistant) | 01 |
| 08. | குளிரூட்டல் மற்றும் வளிச்சீராக்கல் தொழில்நுட்ப உதவியாளர் (Refrigeration and Air Conditioning Technician Assistant) | 01 |
| 09. | கருவி மற்றும் அச்சு தயாரிப்பாளர் உதவியாளர் (Tool and Die Maker Assistant) | 01 |
| 10. | தச்சர் (கட்டிடங்கள்) உதவியாளர் (Carpenter (Building) Assistant) | 01 |
| 11. | தச்சர் (தளபாடங்கள்) உதவியாளர் (Carpenter (Furniture) Assistant | 01 |
| 12. | வாகனக் கூரை மற்றும் மெத்தைப்பணி உதவியாளர் (Hood Maker & Upholster Assistant) | 01 |
| 13. | குழாய் பொருத்துநர் உதவியாளர் (Pipe Fitter Assistant) | 01 |
| | **மொத்தம்** | 22 |



Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

**3.0 சம்பள அளவுத்திட்டம்:**

**3.1 சம்பளக் குறியீடு** - PL 2-2025

**3.2 சம்பள அளவுத்திட்டம்** - ரூ. 41,800/- - 10 x 490 - 10 x 540 - 10 x 590 - 12 x 630 = ரூ. 65,560/-

**குறிப்பு -** I) பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 10/2025 இன் அட்டவணை III இன்படி 01.01.2027 வரை சம்பளம் வழங்கப்படும்; 01.01.2027 முதல் அட்டவணை II இன்படி சம்பளம் வழங்கப்படும்.

II) இதற்கு மேலதிகமாக, அரசாங்கம் அவ்வப்போது அரச அலுவலர்களுக்கு வழங்கும் ஏனைய கொடுப்பனவுகளுக்கும் நீங்கள் உரித்துடையவராவீர்கள்.

**3.3 சம்பள முறைமை:**

| தரம் | ஆரம்பச் சம்பளப் படிநிலை | ஆரம்பச் சம்பளத் தொகை (ரூ.) |
|---|---|---|
| III | படிநிலை 01 | ரூ. 41,800/- |
| II | படிநிலை 12 | ரூ. 47,240/- |
| I | படிநிலை 22 | ரூ. 52,690/- |
| விசேட | படிநிலை 32 | ரூ. 58,630/- |

**4.0 பதவியின் / பதவிகளின் தன்மை** : நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதும்

**5.0 ஆட்சேர்ப்புத் தரம்** : தரம் III

**6.0 மொழி மூலம்** : சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்

**7.0 ஒப்படைக்கப்படும் கடமைகள்:**

| அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர் | கடமைகள் |
|---|---|
| மின்சாரப் பாரந்தூக்கி இயக்குநர் (Electric Crane Operator) | இயந்திர மற்றும் மின்சாரப் பாரந்தூக்கிகளை இயக்குதல் மற்றும் அவற்றின் சிறிய பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளுதல். |
| உலை இயக்குநர் உதவியாளர் (Furnanceman Assistant) | வார்ப்புப் பணிகளுக்குத் தேவையான உலைகளை இயக்குதல் மற்றும் உலைத் திருத்தப் பணிகளுக்கு உதவுதல். |
| பொருத்துநர் (பொது) உதவியாளர் (Fitter (General) Assistant) | பெரிய அளவிலான கதவுகளின் தயாரிப்பு உட்பட அனைத்து கனரகப் பொருத்துப் பணிகளையும் மேற்கொள்ளுதல் மற்றும் இயந்திரத் திருத்தப் பணிகளுக்கு உதவுதல். |
| இயந்திர இயக்குநர் (உற்பத்தி) உதவியாளர் (Machine Operator (Production) Assistant) | ஆணி தயாரிக்கும் இயந்திரங்கள், வாள் திருத்த இயந்திரங்கள் போன்றவற்றை இயக்குதல் மற்றும் அவற்றின் சிறிய பராமரிப்புப் பணிகளுக்கு உதவுதல். |
| இயந்திரப்பணியாளர் உதவியாளர் (Machinist Assistant) | போரிங், மில்லிங், லேத் மற்றும் துளையிடும் இயந்திரங்களை இயக்குதல்; உலோகப் பாகங்களைத் தேவைக்கேற்ப இயந்திரப்படுத்துதல்; சிறிய சேவைப் பணிகளுக்கு உதவுதல். |



SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

| அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர் | கடமைகள் |
|---|---|
| வார்ப்பாளர் உதவியாளர் (Molder Assistant) | வார்ப்புக்குத் தேவையான அச்சுகளைத் தயாரித்தல், அவற்றை வார்ப்புப் பணிக்குத் தயார்படுத்துதல் மற்றும் வார்ப்பின்போது உதவுதல். |
| வார்ப்பு மாதிரி தயாரிப்பாளர் உதவியாளர் (Pattern Maker Assistant) | வார்ப்பு அச்சுகளைத் தயாரிப்பதற்குத் தேவையான மர மாதிரிகளைச் செய்வதற்கு உதவுதல். |
| குளிரூட்டல் மற்றும் வளிச்சீராக்கல் தொழில்நுட்ப உதவியாளர் (Refrigeration and Air Conditioning Technician Assistant) | அனைத்து வகையான வளிச்சீராக்கல் உபகரணங்களின் சேவை மற்றும் திருத்தப் பணிகளுக்கு உதவுதல். |
| கருவி மற்றும் அச்சு தயாரிப்பாளர் உதவியாளர் (Tool and Die Maker Assistant) | கருவிகள் மற்றும் பல்வேறு வடிவ உலோகப் பாகங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான அச்சுகளை உருவாக்குதல் மற்றும் அவற்றின் திருத்தப் பணிகளுக்கு உதவுதல். |
| தச்சர் (கட்டிடங்கள்) உதவியாளர் (Carpenter (Building) Assistant) | கட்டிட நிர்மாணத்திற்குத் தேவையான கூரைகள், கதவு நிலைகள், சாளரங்கள் உள்ளிட்ட அனைத்துத் தச்சுப் பணிகளையும் மேற்கொள்ளுதல் மற்றும் அவற்றின் திருத்தப் பணிகளுக்கு உதவுதல். |
| தச்சர் (தளபாடங்கள்) உதவியாளர் (Carpenter (Furniture) Assistant | மரத்தால் தயாரிக்கப்படும் அனைத்து வகையான தளபாடங்களையும் உருவாக்குதல், மெருகூட்டுதல் மற்றும் அவற்றின் திருத்தப் பணிகளுக்கு உதவுதல். |
| வாகனக் கூரை மற்றும் மெத்தைப்பணி உதவியாளர் (Hood Maker & Upholster Assistant) | மெத்தைப் பணிகள், திரைத் துணிகளைத் தைத்துப் பொருத்துதல் மற்றும் நிகழ்வுகளுக்குக் கம்பளங்கள் மற்றும் விழா நடைபாதைகளை அமைத்தல் ஆகியவற்றுக்கு உதவுதல். |
| குழாய் பொருத்துநர் உதவியாளர் (Pipe Fitter Assistant) | வாயு அமுக்க இயந்திரம் மற்றும் கொதிகலன்களை இயக்குதல் மற்றும் அவற்றின் சிறிய பராமரிப்புப் பணிகளுக்கு உதவுதல். |

## 8.0 தகைமைகள்:

### I). கல்வித் தகைமைகள்:

I. க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில், குறைந்தபட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்

**குறிப்பு:**

I. பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 28/2016 இன்படி, NVQ மட்டம் 3 தகைமையைப் பெற்றுள்ள விண்ணப்பதாரருக்கு I ஆம் விடயத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட கல்வித் தகைமைகள் ஏற்புடையதல்ல

### II). தொழிற் தகைமைகள்:

I. ஒவ்வொரு பதவிக்கும் உரிய கடமைகள் தொடர்பாக, மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப அல்லது தொழிற்பயிற்சி நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட தேசிய தொழில் தகைமை மட்டம் 2 (NVQ 02) இற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.



Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

**அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் ஆரம்ப நிலை அரைத் தேர்ச்சியுடைய சேவை வகுதிக்கான திறந்த ஆட்சேர்ப்பிற்குரிய தொழிற் தகைமைகள்**

| பதவி | தொழிற் தகைமை |
|---|---|
| மின்சாரப் பாரந்தூக்கி இயக்குநர் (Electric Crane Operator) | I. NVQ மட்டம் 2<br>அல்லது<br>II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருடப் பாடநெறி சான்றிதழுடன், மின்சாரப் பாரந்தூக்கிகளை இயக்குவதில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம். |
| உலை இயக்குநர் உதவியாளர் (Furnanceman Assistant) | I. NVQ மட்டம் 2<br>அல்லது<br>II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருடப் பாடநெறி சான்றிதழுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 2 வருட அனுபவம். |
| பொருத்துநர் (பொது) உதவியாளர் (Fitter (General) Assistant) | I. NVQ மட்டம் 2<br>அல்லது<br>II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருடப் பாடநெறி சான்றிதழுடன், இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் அச்சுப் பாகங்களை பொருத்துவதில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம். |
| இயந்திர இயக்குநர் (உற்பத்தி) உதவியாளர் (Machine Operator (Production) Assistant) | I. NVQ மட்டம் 2<br>அல்லது<br>II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருட இயந்திர இயக்குநர் பாடநெறி சான்றிதழுடன், உற்பத்தி இயந்திரங்களை இயக்குவதில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம். |
| இயந்திரப்பணியாளர் உதவியாளர் (Machinist Assistant) | I. NVQ மட்டம் 2<br>அல்லது<br>II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருட இயந்திரப்பணி பாடநெறி சான்றிதழுடன், இயந்திரப்படுத்தலில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம். |
| வார்ப்பாளர் உதவியாளர் (Molder Assistant) | I. NVQ மட்டம் 2<br>அல்லது<br>II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருட வார்ப்புப் பாடநெறி சான்றிதழுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் வார்ப்பாளராக குறைந்தபட்சம் 2 வருட அனுபவம். |
| வார்ப்பு மாதிரி தயாரிப்பாளர் உதவியாளர் (Pattern Maker Assistant) | I. NVQ மட்டம் 2<br>அல்லது<br>II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருட வார்ப்பு மாதிரி தயாரிப்புப் பாடநெறி சான்றிதழுடன், வார்ப்பு மாதிரி தயாரிப்பில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம். |
| குளிரூட்டல் மற்றும் வளிச்சீராக்கல் தொழில்நுட்ப உதவியாளர் (Refrigeration and Air Conditioning Technician Assistant) | I. NVQ மட்டம் 2<br>அல்லது<br>II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருட வளிச்சீராக்கல் பாடநெறி சான்றிதழுடன், குளிரூட்டல், ஆழ் குளிரூட்டல் மற்றும் வளிச்சீராக்கல் அமைப்புகளைப் பொருத்துதல் மற்றும் திருத்துவதில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம். |



Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

| பதவி | தொழிற் தகைமை |
|---|---|
| கருவி மற்றும் அச்சு தயாரிப்பாளர் உதவியாளர் (Tool and Die Maker Assistant) | I. NVQ மட்டம் 2<br>அல்லது<br>II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருட கருவி மற்றும் அச்சுத் தயாரிப்புப் பாடநெறி சான்றிதழுடன், கருவி மற்றும் அச்சுத் தயாரிப்பில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம். |
| தச்சர் (கட்டிடங்கள்) உதவியாளர் (Carpenter (Building) Assistant) | I. NVQ மட்டம் 2<br>அல்லது<br>II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருட கட்டிடக் கூரை அமைப்புப் பாடநெறி சான்றிதழுடன், கட்டிடத் தச்சுப் பணியில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம். |
| தச்சர் (தளபாடங்கள்) உதவியாளர் (Carpenter (Furniture) Assistant | I. NVQ மட்டம் 2<br>அல்லது<br>II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருடத் தளபாடத் தயாரிப்புப் பாடநெறி சான்றிதழுடன், தளபாடத் தயாரிப்பில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம். |
| வாகனக் கூரை மற்றும் மெத்தைப்பணி உதவியாளர் (Hood Maker & Upholster Assistant) | I. NVQ மட்டம் 2<br>அல்லது<br>II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருடப் பாடநெறி சான்றிதழுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் 2 வருட அனுபவச் சான்றிதழ். |
| குழாய் பொருத்துநர் உதவியாளர் (Pipe Fitter Assistant) | I. NVQ மட்டம் 2<br>அல்லது<br>II. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் குறைந்தபட்சம் 1 வருடப் பாடநெறி சான்றிதழுடன், கொதிகலன் மற்றும் காற்றமுக்கித் துறையில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம். |

**III). அனுபவம் :** உரிய துறையில் பெற்ற அனுபவம் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

**IV). உடல் தகுதி**: ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றவும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றவும் போதுமான உடல் மற்றும் உளத் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும்.

**V). ஏனைய தகைமைகள்**

I. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
III. பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளும் விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள **2026.11.06** திகதியன்று எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

**9.0 வயது**: விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.



SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED

**10.0 ஆட்சேர்ப்பு முறை**: தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் பதவிக்குரிய அறிவைப் பரிசோதிக்கும் தொழில்முறைப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

**10.1 தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை**

| பிரதான தலைப்புகள் | அதிகபட்சப் புள்ளிகள் | புள்ளியிடும் முறை | புள்ளிகள் |
|---|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 15 | • க.பொ.த. (உயர்தர) பரீட்சையின் பொதுச் சாதாரணப் பரீட்சையைத் தவிர்த்து, சித்தியடைந்த ஒவ்வொரு பாடத்திற்கும் மூன்று (03) புள்ளிகள் | 09 |
| | | • அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்ற ஒரு வருடத்திற்குக் குறையாத டிப்ளோமா அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த தகைமை | 04 |
| | | • அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆறு மாதங்களுக்குக் குறையாத அல்லது நிர்ணயிக்கப்பட்ட மணித்தியாலங்களைப் பூர்த்திசெய்த சான்றிதழ் பாடநெறி | 02 |
| மேலதிக தொழிற் தகைமைகள் | 35 | விண்ணப்பிக்கும் துறையில் NVQ மட்டம் 3 அல்லது அதற்கு மேற்பட்ட தகைமை | 25 |
| | | வேறு துறையில் NVQ மட்டம் 3 அல்லது அதற்கு மேற்பட்ட தகைமை | 10 |
| மேலதிக அனுபவம் | 45 | அரச அல்லது பதிவுசெய்யப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உரிய துறையில் பெற்ற ஒவ்வொரு வருட அனுபவத்திற்கும் ஐந்து (05) புள்ளிகள் | 45 |
| நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் தலைமைத்துவம், மனப்பாங்கு, ஆளுமை மற்றும் தொடர்பாடல் திறன்கள் | 05 | நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமைக்கேற்ப புள்ளிகள் வழங்கப்படும் | 05 |
| **மொத்தம்** | **100** | | |



Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

**10.2 அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் ஆரம்ப நிலை அரைத் தேர்ச்சியுடைய சேவை வகுதிக்கான திறந்த ஆட்சேர்ப்பிற்குரிய தொழில்முறைச் செய்முறைப் பரீட்சை**

| பதவி | பாடம் | பாடத்திட்டம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| மின்சாரப் பாரந்தூக்கி இயக்குநர் | விடய அறிவு | செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும்.<br>• பாரந்தூக்கியை இயக்கத் தயார்படுத்துதல்;<br>• தூக்கும் சாதனங்களின் மூலம் சுமையை இணைத்து இயக்குதல்;<br>• சுமையைப் பாதுகாப்பாகக் கையாளுதல்;<br>• சிறிய சீரமைப்புகள் மற்றும் திருத்தங்களை மேற்கொள்ளுதல். | 3 மணி | 100 | 40 |
| உலை இயக்குநர் உதவியாளர் | விடய அறிவு | செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும்<br>• மூலப்பொருட்கள் மற்றும் உலோகங்களை அடையாளம் கண்டு எடையிடுதல்; உலை/குப்போலாவை இயக்குதல்;<br>• உலோகத்தை உருக்குதல் மற்றும் கழிவுகளை அகற்றுதல்;<br>• ஊதிகள், எரிப்பான்கள், தூக்கும் மற்றும் ஏற்றும் உபகரணங்களை இயக்குதல்;<br>• உலை, குப்போலா மற்றும் கரண்டியைத் தயாரித்தல் மற்றும் திருத்துதல். | 3 மணி | 100 | 40 |
| பொருத்துநர் (பொது) உதவியாளர் | விடய அறிவு | செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும்<br>• இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் அச்சுகளின் பாகங்களைப் பிரித்தல், ஒன்றுசேர்த்தல் மற்றும் பொருத்துதல்;<br>• இயந்திரம், டை அல்லது அச்சின் பாகங்களைத் திருத்துதல். | 3 மணி | 100 | 40 |
| இயந்திர இயக்குநர் (உற்பத்தி) உதவியாளர் | விடய அறிவு | செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும்<br>• கொல்லர் வடிவமைப்பு இயந்திரங்கள் மற்றும் அழுத்திகளை இயக்கி பராமரித்தல்;<br>• போல்ட் மற்றும் ஆணி வடிவமைப்பு இயந்திரங்களை இயக்கி பராமரித்தல்;<br>• நீரழுத்த இயந்திரங்களை இயக்கி பராமரித்தல். | 3 மணி | 100 | 40 |



Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

| பதவி | பாடம் | பாடத்திட்டம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| இயந்திரப் பணியாளர் உதவியாளர் | விடய அறிவு | செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும்<br>• லேத் இயந்திரப் பணி; துளையிடுதல் மற்றும் தொடர்புடைய பணிகள்;<br>• லேத் மற்றும் துளையிடும் கருவிகளை அரைத்துக் கூர்மைப்படுத்துதல். | **3 மணி** | **100** | **40** |
| வார்ப்பாளர் உதவியாளர் | விடய அறிவு | செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும்<br>• பச்சை மணல் அல்லது உலர் கரு மணலைப் பயன்படுத்தி வார்ப்பு அச்சு தயாரித்தல்;<br>• அச்சை வார்ப்புச் சோதனைக்கு உட்படுத்துதல்;<br>• மணல் கலவைகளைத் தயாரித்தல்;<br>• இரு பாக அச்சை இறுக்குதல், காற்றுத் துளையிடுதல் மற்றும் ஒன்றுசேர்த்தல். | **3 மணி** | **100** | **40** |
| வார்ப்பு மாதிரி தயாரிப்பாளர் உதவியாளர் | விடய அறிவு | செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும்<br>• வழங்கப்பட்ட வரைபடத்திற்கமைய கரு அச்சுப்பதிவுகளைப் பயன்படுத்தி வார்ப்பு மாதிரி தயாரித்தல்;<br>• T மோர்டிஸ் மற்றும் டெனன் இணைப்பைத் தயாரித்தல். | **3 மணி** | **100** | **40** |
| குளிரூட்டல் மற்றும் வளிச்சீராக்கல் தொழில்நுட்ப உதவியாளர் | விடய அறிவு | செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும்<br>• குளிரூட்டல் மற்றும் வளிச்சீராக்கல் அமைப்பை நிறுவுவதற்கான மதிப்பீடு தயாரித்தல்;<br>• சாளர மற்றும் பிரிக்கப்பட்ட வகை வளிச்சீராக்கிகளை நிறுவுதல்;<br>• குளிர்சாதனப் பெட்டி, நீர்குளிரூட்டி, காட்சியகக் குளிரூட்டி, போத்தல் குளிரூட்டி மற்றும் ஆழ் குளிரூட்டிகளைத் திருத்துதல்;<br>• வளிச்சீராக்கிகளைத் திருத்துதல். | **3 மணி** | **100** | **40** |

| பதவி | பாடம் | பாடத்திட்டம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| கருவி மற்றும் அச்சு தயாரிப்பாளர் உதவியாளர் | விடய அறிவு | செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும்<br>• CNC மில்லிங் இயந்திரத்தை இயக்குதல்;<br>• கருவி மற்றும் அச்சுத் தயாரிப்பிற்கான உலோகங்களை அடையாளம் காணுதல்;<br>• மெருகூட்டுதல்;<br>• கருவிகள் மற்றும் டைகளைத் தயாரித்தல். | 3 மணி | 100 | 40 |
| தச்சர் (கட்டிடங்கள்) உதவியாளர் | விடய அறிவு | செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும்<br>• வரைபடத்திற்கமைய கூரை அமைப்பதற்குரிய மரத்தை அடையாளம் காணுதல்;<br>• படிக்கட்டு நிர்மாணம்;<br>• தரையமைப்பு மற்றும் சாளரத் தயாரிப்பு. | 3 மணி | 100 | 40 |
| தச்சர் (தளபாடங்கள்) உதவியாளர் | விடய அறிவு | செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும்<br>• தளபாடத் தயாரிப்பிற்கான மதிப்பீடு வழங்குதல்;<br>• செயற்கை மூலப்பொருட்களைக் கொண்டு தளபாடங்கள் தயாரித்தல்;<br>• மரம் மற்றும் மரப்பலகைகளைக் கொண்டு தளபாடங்கள் தயாரித்தல்;<br>• இயந்திரங்கள், கருவிகள் மற்றும் மின்கருவிகளைப் பராமரித்தல். | 3 மணி | 100 | 40 |
| வாகனக் கூரை மற்றும் மெத்தைப்பணி உதவியாளர் | விடய அறிவு | செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும்<br>• தையல் இயந்திரத்தை இயக்குதல் மற்றும் கையால் தைத்தல்;<br>• வாகன இருக்கை மெத்தை மற்றும் பக்கச் சாளர உறைகளுக்கான பொருட்களைக் குறியிட்டு வெட்டுதல்;<br>• கேன்வாஸ் மூலம் வாகனக் கூரை மற்றும் பக்கச் சாளரப் பகுதிகளைத் தயாரித்தல் அல்லது ஒட்டுத் திருத்தப் பணிகளை மேற்கொள்ளுதல். | 3 மணி | 100 | 40 |



Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

| பதவி | பாடம் | பாடத்திட்டம் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| குழாய் பொருத்துநர் உதவியாளர் | விடய அறிவு | செய்முறைப் பரீட்சையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடத்துறைகளில் இரண்டில் சித்தியடைந்திருக்க வேண்டும்<br>• சூடான மற்றும் குளிர்ந்த நீர் வழங்கல் குழாய்களை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்.<br>• கழிவுநீர் மற்றும் மலக்கழிவு அமைப்புக்களை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்.<br>• எரிவாயு குழாய் அமைப்புகள்;<br>• பம்புகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்.<br>• உயர் அழுத்தக் குழாய்களை நிறுவுதல் மற்றும் பராமரித்தல். | 3 மணி | 100 | 40 |

**குறிப்பு - பதவிக்குரிய அனுபவம் ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றிதழ்களால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அத்தகைமைகள் விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியான 2026.11.06 அன்று செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.**

**11.0** அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 01/2020 இன் ஏற்பாடுகளுக்கமைய விண்ணப்பதாரர் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு உட்பட்டிருக்கக் கூடாது.

**12.0** விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது மிகவும் கவனமாகச் சரியான தகவல்களை வழங்க வேண்டும். தகைமைகள் பரிசீலிக்கப்படும் போது விண்ணப்பதாரர் தகுதியற்றவர் எனத் தெரியவந்தால் எந்த நிலையிலும் அவரது விண்ணப்ப நிலை இரத்துச் செய்யப்படலாம். (விண்ணப்பதாரர் வழங்கிய தகவல் எப்போதாவது பொய்யானது எனத் தெரியவந்தால் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.)

**13.0** விண்ணப்பம் குறித்த மாதிரிப் படிவத்திற்கமைய சமர்ப்பிக்கப்பட வேண்டும். அறிவித்தலில் உள்ள மாதிரி விண்ணப்பத்துடன் ஒத்துவராத மற்றும் பூர்த்தியற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**14.0** விண்ணப்பதாரரின் கையொப்பம் அரச பாடசாலையொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்திய ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற அலுவலர், பொலிஸ் சேவையில் வர்த்தமானிப்படுத்தப்பட்ட பதவியொன்றை வகிக்கும் அலுவலர் அல்லது அரச சேவையில் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் பதவிநிலை அலுவலர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

**15.0** இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைக் கொண்டவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற அனுமானத்தின் அடிப்படையில், குறித்த திகதியன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த அனைவரும் அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் தொழில்முறைச் செய்முறைப் பரீட்சைக்கும் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படுவர். அவ்வாறு அழைக்கப்படுவது, விண்ணப்பதாரர் இப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டதாகக் கருதப்படாது. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமைகள் பரிசீலிக்கப்படும் போது தேவையான தகைமைகள் இல்லை எனத் தெரியவந்தால் அவரின் விண்ணப்ப நிலை இரத்துச் செய்யப்படும்.



Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

**16.0** விண்ணப்பதாரரின் அடையாளத்தை உறுதிப்படுத்தப் பின்வரும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்:

I. ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

II. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

III. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

**17.0** இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பாகப் பணிப்பாளர் நாயகம் தீர்மானிப்பார். அனைத்து விண்ணப்பதாரர்களும் இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டவர்களாவர்.

**18.0 விண்ணப்பிக்கும் முறை:**

அனைத்து விபரங்களையும் உள்ளடக்கி இதனுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைய பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம், கல்வித் தகைமைகள், தொழிற் தகைமைகள் மற்றும் சேவை அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளுடன், **06.11.2026** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு **"பணிப்பாளர் நாயகம், அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம், கொலொன்னாவை வீதி, கொலொன்னாவை"** என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பம் இடப்படும் உறையின் இடது மேல் மூலையில் **"ஆரம்ப நிலை அரைத் தேர்ச்சியுடைய சேவை வகுதியின் தரம் III இற்கான திறந்த ஆட்சேர்ப்பு - 2026"** எனத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

பொறி. எஸ். என். பி. எம். பத்மசிறி
பணிப்பாளர் நாயகம்

09 அக்டோபர் 2026
அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம்,
கொலொன்னாவை வீதி,
கொலொன்னாவை.



SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED